# சுருக்மான தகவல்
# எப்படி நாங்கள் ஆரம்பத்திலேயே பிள்ளையை பாடசாலைக்கு அனுப்புவது சம்மந்தமாக பேச்சுவாாத்தை நடாத்துவது?

**காரணம்**

நாங்கள் எல்லாப் பிள்ளைகளும் அவர்கள் கின்டர் காடன் போகத் தொடங்கியதிலிருந்து தனிப்பட்ட முறையிலும் அதோடு பாடசாலை அலுவல்களிலும் நன்றாக முன்னேறுவதை விரும்புகிறோம். இந்த குறிக்கோளை அடைவதற்கு, உபயோகமாக இருக்கும், ஆரம்ப கால பிள்ளைப் பிராயத்தில் கற்பிப்பதில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களும், பெற்றோரும் - சிலவேளை பிள்ளையுடன் சம்மந்தப்பட்ட வேறு ஆட்களுடனும் சேர்ந்து - பிள்ளையை பள்ளிக்கூடம் அனுப்புவது சம்மந்தமாக ஒரு பேச்சுவார்த்தை செய்வதற்கு ஒன்றுசேர வேண்டும்.

இந்தப் பேச்சுவார்த்தைக்கு ஒரு சரியான பாதை இருக்கிறது. இது ஆரம்பகால பிள்ளைப் பிராயத்தில் கற்பிப்பதில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களுக்கும் அதோடு பெற்றோருக்கும், சேர்ந்து உண்மையிலேயே முக்கியமான விசயங்களைக் கண்டுபிடிப்பதற்கும், அவதானித்தவற்றை பரிமாறிக் கொள்ளவும் மேலும் எவை கின்டர் காடன் வெற்றிகரமாக போவதற்கு அவசியமானவை என்பதை சேர்ந்து கண்டுபிடிப்பதற்கும் உதவும்.

இந்த சுருக்கமான தகவல் இந்தப் பாதையின் முக்கிய படிகளை விபரிக்கிறது. இந்த நடவடிக்கையின் சரியான தகவல்களை «Schulische Standortgespräche» www.vsa.zh.ch/ssg இல் காணலாம்.

**எப்போ ஒரு பேச்சுவார்த்தை நடாத்தப்படும்?**

ஒரு பிள்ளைக்கு கின்டர் காடன் போகத் தொடங்கும் போது அனேகமாக விஷேஷமாக கற்பிப்பதற்கான ஏற்பாடுகள் அல்லது வழக்கமான பாடசாலையில் விஷேஷ கற்பிக்கும் முயற்சிகள் தேவைப்பட்டால், பிள்ளையை பாடசாலைக்கு அனுப்பும்போது ஒரு பாடசாலை விவகாரங்கள் சம்மந்தமாக பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும், அப்போ:

– விஷேஷமாக கற்பிப்பதற்கான ஏற்பாடுகளாவன ஒன்றுசேர்த்து விஷேஷமாக கற்பிக்கும் முறைக்கு வழக்கமான பாடசாலை பொறுப்பு (ISR), ஒன்றுசேர்த்து விஷேஷமாக கற்பிக்கும் முறைக்கு விஷேஷ பாடசாலை பொறுப்பு (ISS), ஒரு உடல்- அல்லது பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கு ஆலோசனையும் அதோடு உதவியும் அல்லது ஒரு முழுநாள் விஷேஷ பாட-சாலை- அல்லது மாவணவர் தங்கும் விடுதியுடன் கூடிய விஷேஷ பாடசாலை போன்றவை தேவை என்பதை உறுதி செய்ய வேண்டும்˙
– வழக்கமான பாடசாலையில் விஷேஷ கற்பிக்கும் முயற்சிகள் மேலும் அதோடு பேசுவதற்கு பயிற்சி, அசைவுகளுக்கான பயிற்சி, மனோ ரீதியான பயிற்சி, ஒலியைக் கற்பதற்கான சலுகைகள், வேறு பாஷை பேசுகின்ற புதிதாக வந்தவர்களுக்கான வகுப்புக்கள் அல்லது ஒன்றுசேர்த்து ஊக்குவிப்பது (IF) போன்றவை தேவை என்பதை உறுதி செய்ய வேண்டும்.

**யார் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றுகிறார்கள்?**

இந்தப் பேச்சுவார்த்தையில் நிலமையை விளக்குவதற்கு முக்கியமானவர்கள் பங்குபற்றுவார்கள். எப்பொழுதும் ஆரம்பகால பிள்ளைப் பிராயத்தில் கற்பிப்பதில் தேர்ச்சி பெற்ற அசிரியரும் அதோடு பிள்ளையை வளர்ப்பதற்கு பொறுப்பானவர்களும் (தகப்பன் உம்/அல்லது தாய்) இருப்பார்கள்.

**இந்தப் பேச்சுவார்த்தை எவ்வளவு நேரம் நடக்கும்?**

இந்தப் பேச்சுவார்த்தை வழக்கமாக ஒரு மணித்தியாலம் நடைபெறும்.

**இந்தப் பேச்சுவார்த்தையை யார் தலைமைதாங்கி நடாத்துவது?**

வழக்கமாக இந்தப் பேச்சுவார்த்தையை ஆரம்பகால பிள்ளைப் பிராயத்தில் கற்பிப்பதில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர் தலைமை தாங்கி நடாத்துவார்.

| | |
|---|---|
| யார் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுவது? | இந்தப் பேச்சுவார்த்தைக்கு தலைமை தாங்குபவர்தான், வழக்கமாக அழைப்பு விடுவார். |
| நான் எப்படி இந்தப் பேச்சுவார்த்தைக்கு ஆயத்தம் செய்யலாம்? | எல்லா பங்குபற்றுபவர்களும் «ஒரு பாடசாலை விவகாரங்கள் சம்மந்தமான பேச்சுவார்த்தைக்கு தனிப்பட்ட முறையில் ஆயத்தம் செய்தல» («Persönliche Vorbereitung eines Standortgesprächs») என்ற படிவத்தை நிரப்புவதன் மூலம் ஆயத்தம் செய்யலாம்.<br>இந்த ஆயத்தம் செய்யும் படிவம் எவை முக்கியமான விசயங்கள், அதைப்பற்றி நாங்கள் கதைப்பதற்கு என்பதை, சேர்ந்து விரைவாக கண்டுபிடிப்பதற்கு உதவும். |
| எப்படி நான் இந்த ஆயத்தம் செய்யும் படிவத்தை நிரப்புவது? | இந்தப் படிவத்தில் நீங்கள் தற்போதைய நிலைமையைப் பற்றி உங்களுடைய சொந்த வர்ணனையை குறிப்பெழுதவும்: «இப்பொழுது என்ன கஷ்டமாக இருக்கிறது, என்ன நன்றாக இருக்கிறது? என்னுடைய பார்வையில் எது மிக முக்கியமான பிரச்சனையாகத் தெரிகிறது? எங்கே நான் என்னுடைய பிள்ளையின் திறமையைக் காண்கின்றேன்?»<br>முடிவில் இந்தப் படிவத்தைப் பார்த்து எல்லா முக்கியமான விசயங்களையும் யோசிக்க வேண்டும், நீங்கள் உங்களுடைய பிள்ளையைப் பொறுத்தவரையில் எதில் திறமையாக அல்லது பிரச்சனையாக இருப்பதை அனுபவப்பட்டிருக்கிறீர்கள் என்று. ஒரு பகுதிக்குப் பெயர் உதாரணமாக «செய்யவேண்டியவற்றை சமாளிப்பது». உங்களுடைய அபிப்பிராயப்படி, உங்களுடைய பிள்ளை மற்ற ஒரே வயதுள்ள சேர்ந்து விளையாடும் பிள்ளைகள் மாதிரி இருப்பதாக தீர்மானித்தால், நீங்கள் அந்தப் இடத்திற்கு நடுவிலே புள்ளடியிடவும். சிலவேளை ஒரு புள்ளடி மட்டும் போடுவது கடினமாக இருக்கும். இப்படியான நிலைமையில் நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட புள்ளடிகளும் போடலாம். மேலதிக விமர்சனங்களுக்கு வலது பக்கத்தில் இடம் இருக்கிறது.<br>நீங்கள் நிரப்பிய படிவம் உங்களிடம் தான் இருக்கும். நீங்கள் இதை பேச்சுவார்த்தை முடிந்த பின்பு திரும்ப வீட்டிற்கு கொண்டு போகலாம். |
| இதை நிரப்ப எனக்கு எவ்வளவு நேரம் எடுக்கும்? | நீங்கள் 5-10 நிமிடங்கள் எடுக்கலாம், அதற்குமேல் தேவைய-ில்லை. இது ஆக ஒரு சுமாரான மதிப்பீடு, ஆனால் இது பேச்சுவார்த்தைக்கு பெரும் உதவியாக இருக்கும். |
| நான் எல்லாவற்றையும் கட்டாயமாக நிரப்ப வேண்டுமா? | இல்லை. நீங்கள் «என்னால் இதை மதிப்பிட முடியவில்லை» அல்லது «நான் இதை சொல்ல விரும்பவில்லை» என்று யோசித்தால் அந்த இடங்களை வெறுமையாக விடவும். |
| எப்படி இந்தப் பேச்சுவார்த்தை போகும்? | ந்தப் பேச்சுவார்த்தையின் முதலாவது பகுதியில் ஆயத்தம் செய்யும் படிவத்தில் உள்ள வித்தியாசமான மதிப்பீடுகள் பார்க்கப்படும். («எங்கே எல்லோருக்கும் ஒரே மாதிரியான மதிப்பீடு இருக்கிறது? முற்றிலும் வித்தியாசமாக மதிப்பிடப்பட்ட பகுதிகள் இருக்கின்றனவா?»)<br>இனி எந்த (ஒன்று தொடக்கம் இரண்டு) பகுதிகளைப்பற்றி ஆழமாக கதைக்கவேண்டும் என்று சேர்ந்து முடிவெடுப்பது. பங்குபற்றுபவர்கள் எல்லோரும் அவர்கள் அவதானித்தவற்றை சொல்லலாம்.<br>பேச்சுவார்த்தையின் கடைசிப் பகுதியில் இந்தக் கேள்வி முக்கியமாக இருக்கிறது: «என்னுடைய பிள்ளைக்கு படிப்பதற்கு விஷேஷமாக கற்பிப்பதற்கான ஏற்பாடுகள் அல்லது வழக்கமான பாடசாலையில் விஷேஷ கற்பிக்கும் முயற்சிகள் தேவை என்பது உறுதி செய்யப்பட்டதா?» |
| இந்தப் பேச்சுவார்த்தையைப் பற்றிய ஒரு அறிக்கை கிடைக்குமா? | ஆம், ஒரு சுருக்கமான அறிக்கை செய்யப்படும்.<br>இந்த அறிக்கையின் கடைசிப் பக்கத்தில் எந்த குறிக்கோளை சேர்ந்து செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்படும். உங்களுடைய பிள்ளைக்கு பாடசாலை செல்ல ஆரம்பிக்கும் போது வழக்கமான பாடசாலையில் படிப்பதற்கு ஒரு விஷேஷ கற்பிக்கும் முயற்சிகள் தேவை என்பது உறுதிசெய்யப்பட்டால், இதுவும் குறித்து வைக்கப்படும். இந்த பேச்சுவார்த்தையில் பங்குபற்றிய அனைவருக்கும் இந்த அறிக்கையின் ஒரு பிரதி கிடைக்கும் (சுருக்கமான அறிக்கை). |
| பேச்சுவார்த்தையின் பின் அடுத்த நடவடிக்கைகள் என்ன? | பேச்சுவார்த்தையில் பங்குபற்றியவர்கள் முடிவில், விஷேஷமாக கற்பிப்பதற்கான ஏற்பாடுகள் அல்லது வழக்கமான பாடசாலையில் விஷேஷ கற்பிக்கும் முயற்சிகள் தேவை என்பதை உறுதிப்படுத்தினால், «ஆரம்ப காலத்திலே- பாடசாலைக்கு விஷேஷ கற்பிக்கும் முயற்சிகள் தேவை என்பதை உறுதிசெய்யப்பட்டதை அறிவிக்கும் படிவத்தை» நீங்கள் சேர்ந்து நிரப்ப வேண்டும். நிரப்பப்பட்ட அறிவிக்கும் படிவத்தை பேச்சுவார்த்தையைப் பற்றிய சுருக்கமான அறிக்கையுடன் |

சேர்த்து பெற்றோர்கள் வசிக்கும் நகரசபையில் பொறுப்பாகவுள்ள பாடசாலை அதிகார சபைக்கு அனுப்புவார்கள்.
விஷேஷமாக கற்பிப்பதற்கான ஏற்பாடுகள் தேவையா என்பது பற்றி விவாதத்தில் இருந்தால் (ஆராய்ந்து கொண்டிருந்தால்) பொறுப்பாகவுள்ள பாடசாலை நிர்வாக சபை பாடசாலை நிர்வாகத்தினருடன் சேர்ந்து பொறுப்பாகவுள்ள பாடசாலைக்கான மனோதத்துவ பணி புரிபவர்களுக்கு அறிவிப்பார்கள்.
வழக்கமான பாடசாலையில் விஷேஷ கற்பிக்கும் முயற்சிகள் தேவையா என்பது பற்றி விவாதத்தில் இருந்தால் பாடசாலை அதிகார சபை பொறுப்பாகவுள்ள பள்ளிக்கூடத் தலை-வருடன் சேர்ந்து பெற்றோரை ஒரு பேச்சுவார்த்தைக்கு அழைப்பார். பாடசாலைத் தலைவர் அதோடு அந்த நிலைமைக்கு பொருத்தமான ஆசிரியர்கள்- மேலும் தேர்ச்சி பெற்ற நிபுணர்-களை அழைப்பார் அதோடு இந்த விவகாரத்திற்கு பெற்றோர்கள் சம்மதிக்குமாறு பார்ப்பார்கள் தேவைப்பட்டால் பாடசாலைக்கான விஷேஷ கற்பிக்கும் கலையில் தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் மூலம் அத்தியாவசியமான விஷயங்களை தெளிவுபடுத்திக் கூறுவார்கள்.
விஷேஷ கற்பிக்கும் முயற்சிகள் தேவையில்லை என்று உறுதிப்படுத்தினால், பிள்ளையை பாடசாலைக்கு அனுப்புவதைப் பற்றிய பேச்சுவார்த்தையின் பின் எதுவும் செய்ய வேண்டியதில்லை.